உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்

# நான் சொன்னா மட்டும் கேட்பாங்களா!

நாகை ஆசைத்தம்பி
கோவை

தாத்தா,,, தாத்தா,,, என கத்தியப்படி வந்தான் சிவகுரு, அவரோட பேரன்தான் அவன் ஐந்து வயசுதான் ஆகுது என்னடா என்பதுப்போல அன்னாந்து பார்த்தார்.

"என்னான்னு கேளு தாத்தா"

"சரி என்ன சொல்லு"

"நான் அம்மாவெல்லாம் அந்த தெருவுக்கு வீடு பாக்க போனமில்ல அங்கப்போயி அம்மாவும் அப்பாவும் கிச்சன் இருக்கா,,, ஹால் இருக்கா,,, பாத் ரூம் வசதியா இருக்கான்னு ஓடியோடி பாக்குறாங்க...

"சரிடா அவங்களுக்கு அதெல்லாம் வசதியா இருந்தாதானே நல்லது நான் கிராமத்திலையே இருந்தவன் ஏதோ ஓன் பாட்டி போய் சேர்ந்துட்டான்னு நான் இந்த நகரத்தில வந்து நரகத்தில கிடக்கேன் அவங்க சின்னச்சிறுசுங்க வசதியாதானே பாப்பாங்க,,,"

"தாத்தா கொலவிழும் நான் அத சொல்லல அவங்களுக்கெல்லாம் வசதி பாக்குறாங்களே நான் சின்ன பையன்தானே நான் வீட்டுக்குள்ளவே முடங்கி கிடக்கமுடியுமா? வாசலில் விளையாட இடமிருக்கா பக்கத்தில ஸ்கூல் இருக்கா? இதெல்லாம் பாக்க வேண்டாமா,,,, அம்மாக்கிட்ட சொன்னா நீ சின்னபையன் சொல்றத கேளுடான்னு சொல்றாங்க நீங்களாவது சொல்லுங்க. வீடு ஸ்கூலுன்னே இருக்க முடியுமா? அந்த வீடு குருவிக்கூடுமாதரி இருக்கு அத சொன்னா அதான் நல்லதான் சொல்றாங்க,,, தாத்தா,,, தாத்தா ப்ளிஸ் நீங்க சொல்லுங்க"

"நான் சொன்னாலும் அதான்டா சொல்லுவாங்க உன்ன சின்ன பையன் ஒன்னும் தெரியாதுன்னு சொன்னாங்க,,,, என்னை உங்களுக்கு வயசாயிட்டு ஒன்னும் புரியாது இன்னும் பழைய பஞ்சாங்கத்த பொரட்டாதீங்கன்னு சொல்லுவாங்க எதுக்குப்பா நமக்கு

வம்பு எதோ குடுக்குறத குடிச்சிட்டு போற வழிய பாத்துக்கிட்டு நான் கெடக்கேன் அது ஒனக்கு பொறுக்கலயா,,, போடா போயி வீட்டுப்பாடம் படி,,,"

"என்ன தாத்தா இப்படி சொல்றீங்க, வரவர நான் சொல்றத அம்மாவும் அப்பாவும் காதுல வாங்குறதே இல்ல தெரியுமா,,,?"

"அடாப்போடா நான் சொல்றத மட்டும் காதுல வாங்குறாங்களா,,"

"என்ன தாத்தா நீங்க இப்படி சொல்றீங்க நீங்களாவது பேசி புரிய வப்பீங்கன்னு சொன்னா நீங்க நழுவுறீங்களே போ தாத்தா, நான் உங்கக்கூட பேசமாட்டேன்"

"சரி போடா நீ மட்டும்தான் அப்பப்போ பேசுவே நீயும் பேசமாட்டீயா! இனிமேல் நான் மௌனவிரதம்தான்,,,"

"சாரி தாத்தா நான் பேசுவேன் சும்மா சொன்னேன் யாருமே என்னை கண்டுக்குறது இல்ல அதனால்தான் சொன்னேன் தாத்தா"

"என்னை மட்டும் கண்டுக்குறாங்களா என்ன,,,!"

இப்படி சொல்லிட்டு ஏனோ தெரியல தாத்தா குனிந்தப்படி உட்கார்ந்திருந்தார் அவர் காலடியில் சொட்டுச்சொட்டாக கண்ணீர்த்துளிகள் விழுந்தப்படி,,,.

**utsmdu2@gmail.com**

((((((((((((()))))))))))))